## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
## அஹமதி தமிழ் திருச்சபை

# "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்"

மத்தேயு 26:41

செய்தி மலர்
2023
மார்ச்

இதழ் : 11
மலர் : 19



# சபை செயலாளர் அன்பு மடல்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. இந்த 2023-ம் வருடத்தின் முதல் இரண்டு மாதங்களும் அவருடைய இரக்கங்களால் வழி நடத்தின தேவன் இந்த மார்ச் மாதமும் நம்மை அவருடைய செட்டைகளின் நிழலில் நம்மை காத்து வழி நடத்துவாராக. கடந்த மாதம் துருக்கி,சிரியா நாடுகளில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக 30000-த்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததையும், இலட்சக்கணக்கானோர் காயமடைந்ததையும் தங்கள் உறவினர்களை சொந்த பந்தங்களை இழந்து அனாதையாக்கப்பட்டவர்களாயும் நாம் கேள்விப்பட்டோம். இது கடைசி காலம் என்பதை இந்த சம்பவங்கள் நம்மை எச்சரிக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த இயற்கையின் சீற்றங்களுக்கு நம்மை மறைக்கவும், அவருடைய வருகை வெகு சமீபமாயிருக்கிறபடியால் நாம் நம்மை பரிசுத்தமாக காத்து கொள்ளவும் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படவும் ஒவ்வொரு நாளும் ஜெபத்திலே தரித்திருக்கடவோம்.

"நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" (மத்-26:41)

இயேசு ஒலிவமலையில் உள்ள கெத்செமனே தோட்டத்தை தன்னுடைய ஜெப இடமாக தெரிந்துகொண்டார். பெரிய செல்வந்தர்களுடைய வீட்டிலே "ஜெப அறை" அல்லது பூஜை அறை இருக்கும். நரிகளுக்கு குழிகளும் ஆகாயத்து பறவைகளுக்கு கூடுகள் இருந்தாலும், இயேசுவுக்கோ தலைசாய்க்க இடம் இல்லாதிருந்தபடியால் அவர் அடிக்கடி ஒலிவமலையில் ஏறி ஜெபித்து வந்தார்.

## கெச்செமனே: ஜெபிக்கும் இடம்

"அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. (லூக்-22:44)

"கெத்செமனே" என்று சொன்னால் கர்த்தர் தெரிந்து கொண்ட ஜெப ஸ்தலம். நம் இயேசு தனித்து விடப்பட்டவராக எல்லா அந்தகார வல்லமைகளோடும் எதிர்த்து நின்று மகா ஊக்கமாய் ஜெபித்தார், போராடினார். அவர் எப்படி ஜெபித்தார்? "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினனின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார். எபி–5:7. யோவான் 17–ம் அதிகாரத்தில் அவர் பிதாவை நோக்கி ஜெபித்த ஜெபத்தை காணலாம். இயேசு இந்த கெத்செமனே தோட்டத்தில் தான் முதன் முறையாக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார். அவருடைய இரத்த நாளங்கள் வெடித்து வேர்வையோடு இரத்தமும் கசிந்து வந்திருக்குமானால், அவர் எவ்வளவு நருங்குண்ட, நொறுங்குண்ட பலியாக ஜெபித்திருப்பார். இயேசு இந்த உலகத்திற்கு வந்த ஒரே காரணம், தன்னுடைய கண்ணீர், வியர்வை, இரத்தத்தை சிந்தி சாத்தானுக்கு அடிமைப்பட்டு போன மனுக்குலத்தை மீட்டெடுக்க வேண்டுமென்பதாகவே இருந்தது. அதற்காக அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்தார். அதிக ஊக்கத்தோடே ஜெபித்தார்.

கெத்செமனே என்பதற்கு "எண்ணெய் செக்கு" என்பது அர்த்தமாகும். ஒலிவ விதைகளை செக்கிலே ஆட்டி ஒலிவ எண்ணெயை எடுப்பார்கள். இயேசு பாடுகளை, உபத்திரவங்களை, வேதனைகளை தன் ஆத்துமாவிலே அனுபவித்து தன்னையே பிழியப்பட ஒப்புக்கொடுத்த இடம். ஜெபத்தினாலும் தன்னை நொறுக்க சித்தமான இடம். நம்முடைய குடும்பத்தில் குழப்பங்களும், போராட்டங்களும், பிரச்சனைகளும் தீர வேண்டுமென்றா், உங்களுக்கு கெத்செமனே ஜெபம் அவசியம். நாம் தண்ணீரை கடக்கும் போதும், ஆறுகளை கடக்கும் போதும் கெத்செமனே அனுபவத்தை மறந்து விடகூடாது. இந்த கெத்செமனே ஜெபம் நமக்கு விரோதமாக வருகிற கொந்தளிப்பை அமரப்பண்ணும், புயல் காற்றுகளை ஓயப்பண்ணும். ஜெபிக்க ஜெபிக்க அந்தகாரத்தின் அஸ்திபாரங்கள் நொறுங்கி விழும். கெத்செமனே தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் இடம்:

ஒவ்வொரு மனிதனுக்கும் "சுயத்தை" கர்த்தர் தாமே கொடுத்திருக்கிறார். அவனுடைய விருப்பங்கள் அனைத்தும் சுயசித்தத்திலிருந்து வெளிவருகின்றன. பிதாவின் சித்தம் செய்ய இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு சரீரம் முன்பதாகவே ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. (எபி–10:5) கெத்செமனே தோட்டத்திலே, முதலாவது இயேசு கிறிஸ்து தன்னுடைய

சுயசித்தத்தை, கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து பிதாவின் சித்தத்தை ஏற்றுக்கொண்டார். பிதாவே, உமக்கு சித்தமானால் இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் என்று கேட்டாலும் கூட, பிதாவின் முழு பரிபூரண சித்தத்திற்கு அர்ப்பணித்து, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான். (லூக்-22:42,43) நம்முடைய விருப்பங்களையும் கர்த்தருக்கு ஜெபத்திலே தெரிவிப்பது தவறல்ல. நம் விருப்பமும் கர்த்தரின் விருப்பமும் ஒன்றாயிருக்குமானால் நிச்சயமாகவே கர்த்தர் அதை தந்தருள்வார். ஒருவேளை நம் விருப்பம் கர்த்தருடைய விருப்பத்திற்கு வேறுபடும் போது கர்த்தரின் சித்தத்திற்கு ஒப்புவிப்பது நல்லது. ஏனென்றால் நம்முடைய வழிகளை பார்க்கிலும் கர்த்தருடைய வழிகள் ஆயிரமடங்கு மேன்மையானவை.

இயேசு முதலில் இரத்தம் சிந்திய இடம் கெத்செமனே ஏன் அவர் கல்வாரியில் இரத்தம் சிந்தும் முன்பு ஜெபிக்கும் இடமான கெத்செமனேயில் இரத்தம் சிந்தினார்? மனிதனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து பரலோகம் வரைக்கும் எட்டக்கூடியது. மனிதனுடைய ஒவ்வொரு துளி ரத்தமும் இறைவனை நோக்கி கூப்பிடுவதுதான் கிறிஸ்துவின் ஒவ்வொரு இதயத்துடிப்பும், ஜனங்களுக்கு மன்னிப்பு அருள வேண்டும், பாவ மன்னிப்பை கொடுக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. கெத்செமனே தோட்டத்திலே அவர் இரத்தம் சிந்தும்போது ஜெபித்துக்கொண்டும், பிதாவுடைய சித்தத்திற்கு ஒப்புகொடுத்து கொண்டும், இருந்த அவர் ஒரு வினாடி கண்களை திறந்து நித்திரை மயக்கத்தோடு இருந்த சீஷர்களைப் பார்த்து " என்னோடே கூட ஒரு மணி நேரமாவது விழித்திருந்து ஜெபிக்க கூடாதா? என்று கேட்டார். (மத்-26:40)

தனியாய் ஜெபித்தால் சோர்ந்து போவோம், சத்துரு எண்ணங்களை சிதறடிப்பான். ஆனால் செத்செமனே சிந்தையோடு இயேசுவின் கரம்பிடித்து அவரோடு இணைந்து ஜெபித்தால் உற்சாகமாக சோர்வடையாமல், பல மணி நேரங்கள் ஊக்கமாய் ஜெபிக்கமுடியும். இந்த லெந்து காலங்களில் அவருடைய பாடு மரணங்களை சிந்தித்து ஒரு மணி நெரமாவது அவருக்கென்று ஒதுக்கி. தேசத்திற்காக, குடும்பங்களுக்காக, சபைக்காக ஜெபிக்க நம்மை ஒப்பு கொடுப்போம். "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையம் ஊற்றுவேன் என்று வாக்களித்திருக்கிறாரே. (சக-12:10)ஆம் நமக்கு ஒரு விண்ணப்பத்தின் ஆவியும், கண்ணீரின் ஆவியும், நொறுங்குண்ட

நருங்குண்ட இருதயம் தேவை. கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சிறந்த ஜெபவீரனைாய் மாற்றும்.
தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.
ஆமென்,

சபையின் செயலாளர்,
சகோ. ஏசுரெத்தினம்

## என் புறாவே

தாலாட்டு கேட்டதில்லை
தலைகோர தாயுமில்லை
தாய் அன்பை காட்டிடவே
தரணியில் நீர் வந்தீரே
உன் புறாக் கண்கள் மத்தியிலே
புழுவாகிய என்னையுமே
உருக்கமான இரக்கத்தால்
இடைவிடாமல் காத்தீரே
நித்திரையில் நான் இருக்க
என் இருதயமோ விழித்திருக்க
என் பிரியமே, என் ரூபவதியே
எழுந்து வா என்றழைத்தீர்

கதவை திறக்கும் நேரத்தில்
நான் தாமிதித்த காரணத்தால்
உமைக் காணாமல் தவித்தேனே
சோர்ந்து போன என் ஆத்துமாவை
உன் புறாக்கண்கள் கண்டிடவே
என் நேசருக்கு சொல்லும் படி
காட்டுப்புறா ஒன்றை தூதுவிட்டேன்
தாயும் நீயாய் சேயும் நானாய்
இவ்வாழ்வை வாழ்ந்திடவே
உம் நேசத்தை சொல்லிவிட்டு
மரு ரூபமானீரே . . .

கிறிஸ்த்துவின் பனியில்,
சகோதரி. வனித்தா

## தேவ செய்தி

முகாந்திரம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையின் பிள்ளைகள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

"நான் வந்ததற்கு முகாந்திரம் இல்லையா"? என்று தாவீது 1-சாமு-17:29-ல் சொல்வதை பார்க்கலாம். ஆம் தேவனுடைய பிள்ளைகளே நாம் இந்த உலகத்தில் வந்ததற்கு முகாந்தரம் உண்டு.

துன்மார்க்கமாக சாபத்திலும் பாவத்திலும் உழன்ற நம்மை அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் மீட்டு இரட்சித்து அவருடைய பிளையாய் மாற்றி நம்முடைய குடும்பத்தில் இருந்து பிரித்தெடுத்தற்கு

ஒரு முகாந்தரம் உண்டு. நம்மைக் கொண்டு நம் குடும்பத்தை இரட்சிக்க நம்முடைய பிள்ளைகளை அவரை அறிகிற அறிவில் வளர்த்த நம்முடைய நண்பர்களை கர்த்தருக்குள்ளாய் நடத்த தேவனை அறியாத ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க இப்படியாக தேவன் நம்மை முன்குறித்து அழைத்திருக்கிறார்.

வேதத்தில் இருந்து ஒருசில பாத்திரங்களை பார்ப்போம். தேவன் அவர்களை முன் குறித்ததின் முகாந்தரம் என்னவென்றும் அவர்களை கொண்டு தேவன் எவ்வாறு மகிமைப்பட்டார் என்றும் பார்ப்போம்.

**1.மோசே:** யாத்-3:1-10 வசனங்களை வாசிக்கும்போது தன் மாமாவின் ஆடுகளை மேய்த்து கொண்டு வந்த போது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்கு தரிசனமாகி எகிப்தில் இருக்கிற என் ஜனங்கள் இடுகிற கூக்குரலையும், படுகிற வேதனையும் அறிந்து அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை அவர்களுக்கு கொடுக்கவும் கர்த்தர் மோசேயை தெரிந்து கொண்டார் என்று பார்க்கிறோம்.

பாருங்கள் தேவன் மோசேயை அழைத்ததற்கு ஒரு முகாந்தரம் வைத்திருந்தார். ஆனால் தொடர்ந்து வாசிக்கும்போது ஆண்டவரே நான் எம்மாத்திரம் (யாத்-3:11) நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன் (யாத்-4:10) என்று தன் இயலாமையை ஆண்டவரிடம் சொல்கிறான். அழைத்தவர் உண்மையுள்ளவர் எந்த முகாந்தரத்திற்காக பிடிக்கப்பட்டானோ அதை அவனை நிச்சயமாய் நிறைவேற்றி முடிப்பார். நியா-6:15 இஸ்ரவேல் ஜனங்களை விடுதலையாக்க கர்த்தர் தெரிந்து கொண்ட கிதியோன் இப்படியாக எனக்கு பெலனில்லை. என் குடும்பம் எளியது எதினாலே நான் மீதியானியரை முறியடிப்பேன் என்று தன் இயலாமையை சொன்ன போது அங்கே அவர் (நியா-6:12) அவனை பார்த்து பராக்கிரமசாலியே என்று சொல்லி (நியா-6:14) உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ, உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா? என்றும் நியா-6:16-ல் ஒரு மனுஷனை முறியடிப்பது போல் நீ மீதியானியரை முறியடிப்பாய் என்று கர்த்தர் கிதியோனோடு சொல்கிறதை பார்க்கிறோம்.

நம்மால் முடியாது என்று நாம் தேவனிடத்தில் சொல்லும் போது என்ன முகாந்தரத்துக்கு நம்மை தேவன் அழைத்தாரோ, முன்குறித்தாரோ, பிரித்தெடுத்தாரோ அதை நிச்சயமாய் நம்மைக்கொண்டு அவர் மகிமைப் படும்படியாக நிறைவேற்றுவார். இங்கே மோசேயை குறித்து பார்க்கும்போது யாத்-3:12-ல் கர்த்தர் அவனை பார்த்து நான் உன்னோடு கூட இருப்பேன் என்று சொல்லி அவனை கரம்பிடித்து வழி

நடத்தினார் என்று பார்க்கிறோம். எத்தனையோ சோதனைகளை பார்வோன் கொடுத்த போதிலும் எல்லாவற்றையும் ஜெயமாக மேற்க்கொண்டான் என்று பார்க்கலாம். அதே போல் எத்தனையோ முறை இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயினிடத்தில் முறையிட்டு அவனை வேதனைப்படுத்தின போதும் மோசே தேவனிடத்தில் காரியத்தை தெரியப்படுத்திய போது சங்-106:9,21-யிலுள்ள வசனங்களில் அவர் பயங்கரமான அதிசயமான காரியங்களை அவர்களிடையே செய்தார் என்று பார்க்கிறோம். சங்-77:20-ல் மோசே ஆரோனைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப் போல் வழி நடத்தி அந்த ஜனங்களை பரம கானானுக்கு கொண்டு செல்லும்படி தெரிந்துகொண்டார்.

**2. யோசேப்பு:** யோசேப்பை தேவன் ஒரு முகாந்தரமாக எகிப்து தேசத்தில் அடிமையாக கொண்டு போனார் என்று பார்க்கிறோம். அவனுடைய சகோதரர்கள் அவனுடைய பலவர்ண அங்கியை கழற்றி தண்ணீரில்லாத குழியிலே போட்டார்கள்(ஆதி-37:23,24) தகப்பன் வீட்டை இழந்து எகிப்திற்கு அடிமையாக விற்கப்பட்டான் (ஆதி-37:28)அங்கு கொண்டு செல்லப்பட்டவன் தேவ கிருபையிலே பெலன் கொண்டு அந்த தேசத்திற்கே ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் அதிகாரியானான் என்று சொல்லி ஆதி-41:38-44-ல் உள்ள வசனங்களில் பார்க்கலாம். அவனை அந்த தேசத்தில் தேவன் முன்னே அனுப்பினதின் முகாந்தரம் என்ன ஆதி-45:5 வரவிருந்த பஞ்சத்துக்கு அவனையும் அந்த தேசத்து ஜனங்களையும் அவன் குடும்பத்தையும் ஜீவ ரட்சனை செய்யும்படி தேவன் அவனை முன்குறித்தார் என்று சொல்லி பார்க்கிறோம்.

**3. தாவீது:** சங்-78-71-ல் கறவலாடுகளின் பின்னாக திரிந்த தாவீதை தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்திரமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்காகவும் அழைத்து கொண்டு வந்தார். இங்கே மேற்கூறிய வசனத்தில் தேவன் வனாந்திரத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை முன்குறித்ததின் முகாந்தரத்தை குறித்து பார்க்கலாம். 1-சாமு:17-ம் அதிகாரம் முழுவதும் வாசிக்கும்போது அங்கே ஒரு ராட்சதன் (கோலியாத்) கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறதை கேட்டான். இதினிமித்தமாக ராஜாவாகிய சவுலும் இஸ்ரவேல் படை வீரர்களும் கோலியாத்துக்கும், பெலிஸ்திய படைக்கும் பயந்து கலங்கினார்கள் என்று (1-சாமு-17:10,11)-ல் நாம் வாசிக்கலாம். ஆனால் தேவன் ஒரு முகாந்தரமாக அங்கே இஸ்ரவேல் படைக்குள் அனுப்புகிறதை நாம் காணலாம். அவன் மூலமாக தேவன்

அங்கே மகிமைப்பட்டார் என்று 1-சாமு-17:40,47,49)-ல் பார்க்கிறோம். தொடர்ந்து 1-சாமு-17:51,52,53 வசனங்களை வாசிக்கும்போது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு விடுதலையை தாவீதின் மூலமாய் தேவன் கட்டளையிட்டார் என்று சொல்லி பார்க்கலாம். இப்படியாக அனேக பாத்திரங்களை தேவன் ஒரு நோக்கத்திற்காக தெரிந்து கொண்டதை பார்க்க முடியும்.

**4.பவுல்:**அப்.பவுலைகுறித்து, அப்-9:15-ல் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக "நான் தெரிந்து கொண்ட பாத்திரம்" என்று இயேசு கிறிஸ்து சொல்கிறதை பார்க்கலாம்.

**5.சீஷர்கள்:** மத்-10:1-42-ல் சீஷர்களுக்கு வரங்களை கொடுத்து அவர்களை ஆசீர்வதித்ததின் நோக்கம் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேலரை மீட்கும்படியாக தெரிந்து கொண்டார். யோவா-20:17-ல் பேதுருவினிடத்தில் இயேசு கிறிஸ்து என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று சொல்வதை பார்க்கலாம்.

ஒரு எஸ்தரை முன்குறித்தார் என்றால் அந்த எஸ்தரைக் கொண்டு யூத ஜனங்களுக்க விடுதலை கொடுப்பது அவர் திட்டமாய் இருந்திருக்கிறது. ஒரு யோனாவை தெரிந்து கொண்டதின் முகாந்தரம் நினிவே ஜனங்களை இரட்சிக்கம்படியாக. பிதாவாகிய தேவனும் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்தில் அனுப்பினதின் முகாந்தரம் என்ன? யோவா-3:16 ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படியாக நம்மீது அன்பு கூர்ந்து அவரை தந்தருளினார் என்று பார்க்கிறோம்.

ஆம், தேவனுடைய பிள்ளைகளே அவருடைய வருகைக்காக எதிர்பார்த்திருக்கிற நாம் தேவன்ன முகாந்தரத்திற்காக நம்மை முன்குறித்தாரோ அதை அறிந்து அதின்படி நடந்து சாட்சியுள்ள பிள்ளைகளாய் வாழ்வோம். தேவ ராஜ்ஜியத்தை சுதந்தரிப்போம்.

பிலி-3:14-ல் அப்.பவுல் சொல்வதை போல தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தைய பொருளுக்காய் இலக்கை நோக்கி ஓடுவோம். தேவன் தாமே நாம் ஒவ்வொருவருக்கும் ஜீவ பாதையில் நடக்க உதவியும், ஒத்தாசையும் தந்தருள்வாராக. ஆமென்.

கர்த்தரின் ஊழிய பாதையில்,
**சகோ. M. கிறிஸ்டோபர்**

# கொலம்பா (521–597)

துறவு வாழ்க்கை, குடும்பங்களை வீட்டு இறைவனையே சார்ந்து வாழும் வாழ்வு. உலக ஆசாபாசங்களுக்கு இதில் இடமில்லை. எளிமையும் தனிமையுமே இதன் நண்பர்கள். ஐரோப்பிய நாடுகளில் இத்துறவு வாழ்வை அநேகர் விரும்பி ஏற்றுக்கொண்டிருந்த காலம். சிறு சிறு மடங்கள் ஆங்காங்கே தோன்றிக்கொண்டிருந்தன.

ஆடம்பரமற்ற வாழ்வும், எளிய உணவும், வேத வாசிப்பும் தியானமும் மக்களை மனதைக் கவர்ந்தன. துறவிகளின் பரிசுத்த வாழ்க்கை ஜொலிக்க ஆரம்பித்தது. அயர்லாந்தில் பிறந்த கொலம்பா இவ்வாழ்வால் மிகவும் கவரப்பட்டார். ஆத்ம வளர்ச்சியில் அனுதினமும் வளர அரும்பிரயாசப்பட்டார். எனவே துறவு மடத்தில் தன்னை இனைத்துக்கொண்டார். உலகப் பற்றுகள் அவரை விட்டு ஓட்டம் பிடித்தன. கிபி–550–ல் டர்மாக் என்னுமிடத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தை நிறுவினார். இவருடைய தூய வாழ்க்கையையும், சொற்பொழிவையும் கேட்ட மக்கள் இரவுப் பகலாக அவரைக் காணத் துடித்துக்கொண்டிருந்தனர். பலர் துறவு வாழ்வை மேற்கொண்டு இம்மடத்தில் இணைந்தனர். அந்நாட்டின் அரசன் தீயவழிகளில் சென்றதால் அவதை திருத்த முயற்சிகள் மேற்கொண்டனர். அம்முயற்சிகள் பலனளிக்காததால் அந்நாட்டை விட்டு வெளியேறினார். ஐயோனா என்ற தீவில் வந்து சேர்ந்த இவர் அங்கு ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தைக் கட்டி அநேகரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

வேதம் வாசிப்பதையும், ஜெபம் செய்வதையுமே பிரதானமாகக்கொண்ட கொலம்பா தரையில் உறங்கி ஒரு கல்லைத் தனக்கு தலையணையாகப் பயன்படுத்தி எளிய உணவை உண்டு சிறப்பான வாழ்வை நடத்தியவர் கொலம்பா. ஏழைக்குடியானவன் முதல் அரசன் வரை அனைவரும் இவர் சொற்படி கேட்டு நடந்ததால் நாட்டில் அமைதியும், இன்பமும் அளவில்லாமல் காணப்பட்டது.
"ஆவியில் எளிமையுள்ளவர்கள்: பரலோக ராஜ்யம் அவர்களுடையது" (மத்–5:3)

அன்பு சகோதரன்,
S.சுகுமார்

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோ. அருள்மணி
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
செல்வன். டியோன் பென்சாம்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்சார்
சகோ. பாலகிருஷ்ணன்
சகோ. சாமுவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்

சகோ. வினிஷ்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
சகோ. ஜாண்போஸ்கோ
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோ. ஏசுரெத்தினம்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. அபியா செல்வி தர்மர்
சகோ. லாசர் ராஜமணி
செல்வி. ஜெஸ்வின் ஆரோக்கியதாஸ்
சகோதரி. எழில் டேனியல்ராஜ்
சகோ. பால் டேனியேல்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி . ஷீபா ஜிவல்சிங்
சகோதரி. கீதா ஜெயக்குமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்
திருமதி & திரு. சுகுமார்

"கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கபண்ணும்"

ஆபகூக் 3:2

# 2023 பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/03/2023 | சகோ.கிறிஸ்டோபர் | சகோ.தாமஸ் |
| 12/03/2023 | சகோ.சாம் சுந்தர் | சகோ.அசோக் குமார் |
| 19/03/2023 | சகோ.ரவி ஜாண் பீட்டர் | சகோ.சாம் ஆனந்த் |
| 26/03/2023 | சகோ.பிராங்கிலின் | சகோ.அருண் இம்மானுவேல் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/03/2023 | சகோ.டேவிட் ஜெயகுமார் | சகோ.பிரசாத் |
| 10/03/2023 | சகோ.வேலுராமர் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 17/03/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/03/2023 | சகோ.ஆரோக்கிய தாஸ் | சகோ.பால் ஜெகநாதன் |
| 31/03/2023 | சகோ.சுகுமார் | சகோ.ஏசுரெத்தினம் |

**09/03/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**11/03/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(வேத வினா பகுதி– யோவான்)

**24/03/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(வேத வினா பகுதி–வெளிப்படுத்தின விசேஷம் )

# 2023 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1.கழற்றி போடப்பட்ட முத்திரை மோதிரம் யார்?

2.ஏகமாய் ஊற்றப்படுவது எது?

3.யூதா மனுஷர் எதை விதைத்து எதை அறுப்பார்கள்?

4.கர்த்தருடைய பெருங்காற்றின் பெயர் என்ன?

5.ஏன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்? வசன இருப்பிடம் தருக

6.மகா கேடானது எது?

7.சொந்த பூமிக்கு திரும்பாத ராஜா யார்?

8.கிரய பத்திரங்கள் எங்கே பத்திரபடுத்தபட்டன?

9.நல்ல அத்திப்பழங்கள் யாருக்கு ஒப்பிடப்பட்டன?

10.ஜீவனை பார்க்கிலும் மரணம் யாருக்கு விருப்பமாய் இருக்கும்?

11.யூதா பட்டணங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

12.எரேமியாவை காவல் அறையில் போட்டவன் யார்?

13.பட்டயத்தால் சாகமாட்டான் என்று யாருக்கு உரைக்கபட்டது?

14.யோய்தாவுக்கு பதிலாக ஆசாரியனாக்கபட்டவன் யார்?

15.எது விசாரிக்கபட வேண்டிய நகரம்?

விடைகளை வருகின்ற 20-03-2023க்குள்
(WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் எரேமியா 5-32 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.

- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7

## 2023 – பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடை

1.தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளை கைக்கொள்வது (பிரசங்கி 12:13 )
2. பிரசங்கி 7:1–23
3.உயர ஏறும் மனுஷனுடைய ஆவி (பிரசங்கி 5:21)
4.கோணலானதை (பிரசங்கி 1:15)
5.காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு (பிரசங்கி 7:8)
6. நூறு பிள்ளைகளைப் பெற்று அநேக வருஷம் ஜீவிக்கிற ஒருவன் (பிரசங்கி 6:3,6)
7.குவித்துவைக்கும் தொல்லையை (பிரசங்கி 2:26)
8.துக்கவீடு (பிரசங்கி 7:2)
9.சூரியனுக்கு கீழே நியாயஸ்தலம் (பிரசங்கி 3:16)
10.கற்பனையைக் கைக் கொள்ளுகிறவன் (பிரசங்கி 8:5)
11.இணங்குதல் (பிரசங்கி 10:4)
12.பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் (பிரசங்கி 7:8)
13.தன் காலத்தை (பிரசங்கி 9:12)
14.தூதாயீம் (உன்னதப்பாட்டு 7:13)
15.கறுப்பு (உன்னதப்பாட்டு 1:5)

## 2023– பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.வனித்தா
Sis.ஜெஸ்லெட்
Sis.ஜீனா சதீஷ்
Sis.மரகதம் ஸ்டீபன்

Sis.நகோமி ஜான்சன்
Sis.சுபா ஸ்டீபன்
Bro.எபிநேசர்
Bro.ஜான்சன்

# வாலிபர் பகுதி

கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக. நம் தேவன் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர். நாமும் பரிசுத்தமாக வாழ வேண்டும் என விரும்புபவர். ஆதலால் நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள் நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். (லேவி-20:7,8)

கிறிஸ்துவுக்குள் நமது அடையாளமாக நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள் என்று இருக்கின்றது. நமது பார்வைக்கு நாம் சரி என்பது போலவும் நான் எல்லாவற்றிலும் தேவனுக்கு பிரியமாக வாழ்கிறேன் என்றும் தோன்றலாம். ஆனால் தேவ பிரசன்னத்தில் நாம் நம்மை பரிசுத்தப்படுத்தும்படி கேட்கும் போது தேவன் நம்மில் நாம் இன்னும் பரிசுத்தப்படுத்த வேண்டிய காரியங்களை வெளிப்படுத்துவார். அவ்வாறு அவர் உணர்த்தும்போது நாம் நமது சொந்த முயற்சியில் மாம்ச பெலத்தினாலே மாத்ரம் முயற்சி செய்யாமல் தேவனிடத்தில் மன்றாட வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தை கேட்க வேண்டும். அதே சமயத்தில் தேவன் பரிசுத்தப்படுத்தும்படி பல மனி நேரம் ஜெபித்து விட்டு நான் எந்த முயற்சியும் செய்யாமல் அதே பழக்கத்தை அதே வாழ்க்கை முறையை பின்பற்றுவேன் என்றிருந்தால் நாம் வெற்றி பெற முடியாது.

ஒரு முறை ஒரு வாலிபன் தெருவில் ஒட்டப்பட்டிருந்த தவறான படத்தை பார்த்து நின்று கொண்டிருந்தான். அவ்வழியாக சென்ற போதகர் ஒருவர் என்ன செய்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன் "நான் பாவத்திற்கு எதிர்த்து நிற்கிறேன். எதுவும் என்னை மேற்கொள்ளாது என்றான். அதற்கு அந்த போதகர் "நீ பாவத்திற்கு எதிர்த்து நிற்கவில்லை பாவம் உன் மிக அருகில் இருப்பதை கவனிக்க தவறினாய் என்று அறிவுரை கூறினார். நாம் எதை பார்க்கிறோம்? எதில் அதிக நேரம் செலவிடுகிறோம்? யாருடைய ஆலோசனைக்கு நாம் இடங்கொடுக்கிறோம்? என்று நம்மை நாமே நிதானித்து சீர்படுத்த வேண்டிய பழக்கங்களை சீர்படுத்த தேன் உதவி செய்வாராக.

பரிசுத்தத்தின் மேலான வாஞ்சைந நம் ஓட்டம் முடியும் வரை நமக்குள் எரிந்து கொண்டிருக்க தேவன் உதவி செய்வாராக. 3 வாலிபர்கள் தங்களை தீட்டுப்படுத்தாமல் சிலையை வணங்காமல் இருந்ததினால் ராஜா கர்த்தரை மகிமைப்படுத்தும் படியாக காரியம் மாறுதலாய் முடிந்தது (தானி-3:28,29) யோசேப்பு என்னும் வாலிபன் தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்டதினால் தேவனுடைய சித்தத்தை

நிறைவேற்ற முடிந்தது. நாமும் நம் சிந்தையில், செயலில், வார்த்தையில், நடக்கையில் எல்லாவற்றிலேயும் பரிசுத்தமாய் வாழ தேவனிடத்தில் நம்மை அர்ப்பணிப்போம். "பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. (வெளி-22:11) ஆமென்.

**வாலிபம் இயேசுவுக்கே.**

## சகோதரிகள் பகுதி

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டவதாக. நமது வாழ்நாளில் மற்றுமொரு புதிய மாதத்தைக் காணச்செய்த நம் தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை எறெடுக்கிறேன்.

2-நாளா-19:7 ஆதலால் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது. எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அநியாயமும், முகதாட்சனியமும் இல்லை. பரிதானமும் அவரிடத்தில் செல்லாது என்றான். இந்த வார்த்தைகளை யோசபாத் அரசர் யூதா தேசத்தின் ஒ்வவொரு பட்டணங்களிலும் ஜனங்களை நியாயம் விசாரிக்க தான் ஏற்படுத்தின நியாயதிபதிகளை பார்த்து "நீங்கள் மனுஷனுடைய கட்டளையினா் அல்ல கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கின்றீர்கள்" ஆகையால் கர்த்தருக்கு பயப்படும் பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது என்பதாக கூறுகின்றார்.

நாம் பல வேளைகளில் மனிதர்களை சார்ந்தவர்களாகவும், அவர்களுக்கு பயப்படுகின்றவர்களாகவும் காணப்படுகின்றோம். சிலர் பண ஆசையினாலும், தனக்கு புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மனிதர்களை சார்ந்திருக்கின்றனர். சிலர் தான் நினைத்த காரியத்தை வாய்க்கச்செய்வதற்காக மனிதர்களை நாடுகின்றனர். ஆனால் வேதம் சொல்லுகின்றது சங்கீ-118:8-ல் மனிதனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் என்பதாக.

நீதி-29:25-ல் பார்க்கும் போது மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் என்பதாக கூறுகின்றது.அப்படி தனக்கு பயப்பட வேண்டும் என்று தனக்குத்தானே கண்ணியை வருவித்துக் கொண்டவன் தான் ஆமான். மொர்தேகாய் தன்னை பணியாததைக் கண்டு மொத்த யூதக் குலத்தையும் அழிக்க வகைத் தேடினான். அதின் விளைவு மொர்தேகாய்க்கு செய்த தூக்கு மரத்தில் தானே அழிவை தேட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டான். ஆனால் மொர்தேகாய் ஆமானுக்கு பயப்படாமல் கர்த்தருக்கு பயந்து நடந்தான். அதனால் மொத்த யூதக் குலமும் எஸ்தர் மூலம் இரட்சிக்கப்பட்டார்கள்.

கர்த்தருக்கு பயப்படுதல் என்றால் என்ன என்பதை நீதி-8:13 நமக்கு விளக்குகின்றது. "தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம்" பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன் என்பதாக. மேலும் எவைகள் தீமையானவைகள் நாம் எவைகளை வறுக்க வேண்டும் என்பதையும் அதே வசனம் நமக்கு விளக்குகின்றது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு மட்டுமே பயப்பட்டார்கள். அவர்கள் இருதயமோ கர்த்தருக்கு தூரமாயிருந்தது. ஏசா-29:13-ல் "இந்த ஜனங்கள் தங்கள் உதடுகிளினால் மட்டுமே என்னை கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாயிருக்கிறது" என்பதாக கூறப்படுகின்றது. கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது இருதயத் தூய்மை சங்-19:9-ல் கர்த்தருக்கு பயப்படும் பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது என்பதாக. அந்த சுத்தம் நம் ஒவ்வொருவருடைய இருதயத்தில் இருந்து புறப்பட வேண்டும். வேதம் சொல்லுகின்றது உங்கள் இருதயமானது நீங்கள் தேவனால் பெற்றும் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்பதாக.அந்த ஆலயமாகிய இருதயத்தை நாம் உண்மையுடனும், அவருக்கு பயப்படும் பயத்தோடும் பாதுகாக்க வேண்டும்.

சிப்பிராள்,பூவாள் என்கிற எபிரேய மருத்துவச்சிகள் கர்த்தருக்கு பயப்பட்டதினால் எபிரேய ஸ்திரீகளின் ஆண் பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள் என யாத்-1:14-ல் பார்க்கின்றோம். அதனால் தேவன் எவர்கள் குடும்பங்களை தழைக்கச் செய்தார் என யாத்-1:21-ல் வாசிக்கின்றோம் நாமும் கர்த்தருக்கு பயப்படும்

**பயத்தோடு அனு தினமும் ஜீவிக்கும்போது கர்த்தர் நம்மையும் நமது குடும்பங்களையும் பாதுகாத்து நித்திய வாழ்வு வாழ நமக்கு அருள் புரிவாராக. ஆமென்.**

# Kids Corner

## The beautiful Rose!

Once upon a time, in a desert far away, there was a rose who was so proud of her beautiful looks. Her only complaint was growing next to an ugly cactus.

Every day, the beautiful rose would insult and mock the cactus on his looks, all while the cactus remained quiet. All the other plants nearby tried to advice the rose, but she was too proud by her own looks.

One scorching summer, the desert became dry, and there was no water left for the plants. The rose quickly began to wither. Her beautiful petals dried up, losing their attractive color.

Looking to the cactus, she saw a sparrow dip his beak into the cactus to drink some water. Though ashamed, the rose asked the cactus if she could have some water. The kind cactus readily agreed, helping them both through the tough summer, as friends.

Dear Children, never look down or tease someone for their looks and never be proud of your looks or your talents. We are God's children, and we need to be kind to everyone.

***Prayer :*** Dear Lord, help me to be kind to everyone. Give me a heart of humility that makes you happy. In Jesus' name I pray, Amen.

***Verse to memorise :***

When pride comes, then comes disgrace, but with humility comes wisdom.

- *Proverbs 11:2*

# கேள்வியும் பதிலும்

**கேள்வி :**

பாஸ்டர், ஆவி , அத்துமா, சரீரம், ஒரு விளக்கம் கூறுங்களேன். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு ஆத்துமாவோடும். உன் முழு பெலத்தோடும், உன் முழு சிந்தையோடும் அன்பு கூறு என்று லூக் 10:27ல் சொல்லபட்டதின் பொருள் என்ன?

## பதில்

மனிதன் ஆவி ஆத்துமா சரீரம் என்கிற மூன்று பகுதிகளுடைய ஒரே மனிதன் எப்படி முட்டை என்கிற ஒன்றில் வெள்ளை கரு, மஞ்சள்கரு, ஒடு, ஆகிய மூன்றும் சேர்ந்ததை முட்டை என்று அழைக்கிறோமோ, அப்படி என புரிந்து கொள்ளுதல். உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடு என்கிறதற்கு – உன் உளமாற– உள்ள பூர்வமாக என்றும், உன் முழு மனதோடு என்பதற்கு – நல் மனசாட்சியோடு – திட்டவட்டமான – தீர்மானத்தோடு என்றும், உன் முழு ஆத்துமாவோடு என்பதற்கு,– உன் உணர்ச்சிகளோடும் – உற்சாகத்தோடும். என்றும் , உன் முழு பெலத்தோடும் என்பதற்கு, உன் உடல் உறுப்புகளை பயன்படுத்தி (கை தட்டி, பாடி, முழுங்காலிட்டு, போன்ற உடல் பெலத்தையும் சேர்த்து ஆராதிக்க வேண்டும், என்பது பொருள். உன் முழு சிந்தனையயோடு என்பதற்கு – நாம் செய்வதை, துதிப்பதை, ஆராதிப்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும், அதாவது நாம் ஆலயத்திலிருந்து கொண்டிருந்தாலும் நமது சிந்தனை ஊர் சுற்றிக்கொண்டிருக்கும், ஆராதனை போலியாய் இருக்ககூடாது என்று பொருள்படும்.

விளக்கமாக சொல்வோமாகில் எபி 10 :16–ஐ வாசித்தால் "நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வாசிக்கிறோம். இங்கே இருதயம் மனம் என்ற இரண்டும் ஒரே பொருளை குறிக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் அதின் அர்த்தம் வேறாய் இருக்கிறது. என் பிராமனங்களை அவர்கள் இருதயத்தில் வைப்பேன் என்றது – அவர்களது நினைவுகளில் அல்லது ஞாபகத்தில் (In Memory) வைப்பேன் என்றும், மனதில் என்பதற்கு "மனம் இருந்தால் மார்கமுண்டு" என்பார்களே. அது போல விருப்பம் இருந்தால் நீங்கள் செய்ய முடியும் என்பதை போல என் பிரமாணங்களை அவர்கள் மனதில் எழுதுவேன் என்பதன் பொருள்– அவர்களின் விருப்பத்தில் கொண்டு வந்து அவர்களை கை கொள்ள பண்ணுவேன் என்பதே.

நாம் 1000 வசனங்களை படித்து ஞாபகத்தில் வைத்திருக்கலாம் ஆனால் அவைகளின்படி செய்ய விருப்பம் உண்டானால் மாத்திரமே அவைகளை கை கொள்ள முனைவோம் என்பதை, இவ்வசனம் (கர்த்தர்) நமக்கு நினைவுறுத்துகி(றார்)றது என்று அறிவோமாக .

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

96646444

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

23924262 - 97545812

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்**

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only